இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 05-11-2025

# அனைத்துக் கட்சிகளும் எதிர்ப்பு!

“ஜனநாயக விரோத - சட்ட விரோத முயற்சிகளைத் தேர்தல் ஆணையம் நிறுத்தி வைக்க வேண்டும். இல்லாவிட்டால், உச்சநீதிமன்றத்தில் அனைத்துக் கட்சிகளும் வழக்கு தாக்கல் செய்யும்” என்று தி.மு.க. தலைவரும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. விரல் விட்டு எண்ணக் கூடிய நான்கைந்து கட்சிகள் மட்டும் வரவில்லை. அதிலும் இரண்டு கட்சிகள் தேர்தல் ஆணையத்தின் நடவடிக்கையை ஏற்கவில்லை என்று அறிவித்த கட்சிகள் ஆகும். ஒன்றிணைந்து செயல்படுவதில் அவர்களுக்கு தயக்கம் இருக்கலாமே தவிர, தேர்தல் ஆணையத்தின் முடிவை அவர்கள் ஏற்கவில்லை. பா.ஜ.க.வும், பா.ஜ.க.வின் பழனிசாமி பிரிவும் மட்டுமே பங்கேற்காத முக்கியக் கட்சிகள். மற்றபடி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் தேர்தல் ஆணையத்தின் நிலைப்பாட்டை விமர்சித்துள்ளன. கடுமையாக எதிர்க்கின்றன.

**“பீகார் மாநில S.I.R. வழக்கு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கின்ற நிலையில், குறிப்பாக அந்த வழக்கில் இறுதித் தீர்ப்பு வெளிவராத காலகட்டத்தில், தமிழ்நாட்டில் தேர்தல் நடைபெறுவதற்கு சில மாதங்களே உள்ள நிலையில், இந்தியத் தேர்தல் ஆணையம் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு (S.I.R.) கொண்டு வந்துள்ளது ஏற்க இயலாது. நமது அச்சத்துக்கு மிக முக்கியமான காரணம், பீகார் மாநிலத்தில் நடைபெற்றவை ஆகும். ஒன்றிய பா.ஜ.க.வின் கைப்பாவையாகத் தேர்தல் ஆணையம் செயல்பட்டு வருகிறது. முறையான நடவடிக்கையைச் செய்யாமல் தேர்தல் ஆணையமே அறிவிப்பைத் தன்னிச்சையாக வெளியிடுவது, அரசியல் சட்டத்திற்கும் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்திற்கும் எதிரானது. இப்போது செய்யப்பட்டுள்ள S.I.R அறிவிப்பே சட்டவிரோதமாகும்”** என்று அனைத்துக் கட்சிகளும் ஒருமித்த உணர்வோடு நிலைப்பாட்டை எடுக்கின்றன.

பீகாரில் இஸ்லாமியர்கள், பட்டியல் சமூகத்தினர், பெண்கள் என்று குறிவைத்து இந்த நீக்கம் நடந்தது. பீகாரில் ஒரே தொகுதியில் 80,000 இஸ்லாமியர்களின் பெயர்களை வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்க முயற்சி நடந்ததாக மூத்த வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன் அவர்கள் குற்றம்சாட்டினார். இதுபோன்ற சதிகளை தமிழ்நாட்டிலும் செய்ய முயற்சிப்பார்கள்.

அரசியல் கட்சிகள் கேட்கும் கேள்விகள் மிகமிகச் சாதாரணமானவை ஆகும். ஆதார் அட்டையை 12-ஆவது ஆவணமாகச் சேர்க்க வேண்டும் என உச்சநீதிமன்றம் உத்தரவிட்டும், இப்போது தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள 27.10.2025 அறிவிப்பில் தெளிவற்ற முறையில் ஆதார் பற்றி குறிப்பிட்டுள்ளது ஏன்? என்பதுதான் இவர்கள் எழுப்பும் கேள்வி ஆகும். ஆதார் அட்டையைக் கொடுப்பதே ஒன்றிய அரசுதான். ஆதார் அட்டைக்கான உச்சநீதிமன்றத்தில் பலமாக வாதிட்டதும் பா.ஜ.க. அரசுதான். இப்போது அவர்களே ஆதார் அட்டையை ஏற்க மறுத்தால் பிறகு யார் ஏற்பார்கள்? ஆதாருக்கு என்ன மரியாதை?

உச்சநீதிமன்றம் உத்தரவிட்ட பிறகும் ஆதார் அட்டையை முழுமையான ஆவணமாக ஏற்க மறுப்பது ஏன்? குடும்ப அடையாள அட்டைகளை முழுமையான ஆவணமாக ஏற்க வேண்டும் என்று தி.மு.க. இதுவரை வைத்த கோரிக்கையை ஏற்க மறுப்பது ஏன்?

ஆவணங்கள் கொடுக்க வேண்டுமா, இல்லையா என்ற தெளிவு இல்லை. இதைக் கூடத் தெளிவாகச் சொல்லாமல் எதற்காக ஒரு அறிவிப்பை வெளியிட வேண்டும் என்பதுதான் அனைத்துக் கட்சிகளும் கேட்கும் கேள்வி ஆகும்.

இந்தப் பணிகள் அனைத்தும் நவம்பர் 4 முதல் தொடங்குகின்றது. ஏற்கனவே மழை பெய்து கொண்டு இருக்கிறது. அரசு அலுவலர்கள், நிவாரணப் பணிகளில் இருக்கிறார்கள். இந்த நேரத்தில் இது போன்ற பணியைச் செய்ய முடியாது. செய்தாலும் குழப்பம்தான் ஏற்படும். தேர்தல் ஆணையத்துக்கு என்ன அவசரம் என்பதுதான் யதார்த்தமான கேள்வி ஆகும்.

**“தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பில் உள்ள குறைகள் களையப்பட்டு, உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டுதலை வெளிப்படையாகக் கடைப்பிடித்து, உரிய அவகாசம் தந்து, 2026 தேர்தலுக்குப் பின்பு, எக்கட்சிக்கும் சார்பற்ற நிலையில் தேர்தல் ஆணையம் S.I.R-ஐ நடத்த வேண்டும்”** என்றுதான் இவர்கள் கோருகிறார்கள்.

பீகாரில் SIR-ல் நடைபெற்றுள்ள மோசடியை Scroll இணையப் பத்திரிகை கள ஆய்வு செய்தது. 100 பேரிடம் பேட்டி கண்டார்கள். பல ஆண்டுகளாக ஒரே முகவரியில் வசித்து வந்த சிலரையே ‘காணப்படவில்லை’ (absent) அல்லது ‘இடமாற்றம்’ (shifted) என்று சொல்லப்பட்டதாக Scroll தெரிவித்திருக்கிறது. தேர்தல் ஆணையம், “வீடு வீடாகச் சென்று சரிபார்ப்பு” நடத்தப்படும் என்று தெளிவாகக் கூறியிருந்த போதிலும், வாக்குச்சாவடி அலுவலர்கள் (BLOs) தங்கள் வீடுகளுக்கு வரவே இல்லை என்று வாக்காளர்கள் Scroll செய்தியாளர்களிடம் தெரிவித்திருக்கிறார்கள். இதுபோல் இங்கும் நடக்காது என்று உத்தரவாதம் தர தேர்தல் ஆணையம் தயாரா?

**எந்த சீர்திருத்தமும் வேண்டாம் என்று சொல்லவில்லை. தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே இருக்கும் நிலையில் எதற்கு இந்த குழப்பம் என்பது தான் கேள்வி. பீகாரில் கண்ணுக்கு முன்னால் அனைத்தையும் பார்த்தோம். அதே போல் இங்கும் நடக்காது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. வைக்கும் குற்றச்சாட்டு எதற்கும் தேர்தல் ஆணையம் பதில் சொல்வது இல்லை. பக்கம் பக்கமாக எழுதி வந்து வாசிக்கிறார் தேர்தல் ஆணையர். ஆனால் எந்தக் கேள்விக்கும் முறையான பதில் அளிப்பது இல்லை.**

எனவேதான் அரசியல் கட்சிகள், தேர்தல் ஆணையத்தை நம்பாமல் உச்சநீதிமன்றத்தின் கதவைத் தட்டுவதற்கு முன்வந்துள்ளன.

**உச்சநீதிமன்றம்தான் உரிய நீதியை உடனடியாக வழங்க வேண்டும்.**




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.11.2025) தருமபுரி வட்டம், அதகபாடி கிராமம் மற்றும் நல்லம்பள்ளி வட்டம், தடங்கம், அதியமான்கோட்டை மற்றும் பாலஜங்கமனஹள்ளி ஆகிய கிராமங்களில் மொத்தம் 1,733 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்பட்டுள்ள தருமபுரி சிப்காட் தொழிற்பூங்காவில் நடைபெற்று வரும், உட்புறசாலைகள், மழைநீர் வடிகால் போன்ற உட்கட்டமைப்பு மற்றும் இதர பணிகளின் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, அமைச்சர்கள் எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், ஆர்.ராஜேந்திரன், எஸ்.எஸ். சிவசங்கர், முன்னாள் அமைச்சர் பழனியப்பன், தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் ரெ.சதிஷ், சிப்காட் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கே.செந்தில்ராஜ், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.11.2025) தருமபுரி நகராட்சிக்கு அருகிலுள்ள ஏ. ரெட்டிஅள்ளி கிராமம், சோகத்தூர் பஞ்சாயத்திற்குட்பட்ட பகுதிகளில் 10 ஏக்கர் பரப்பளவில் 39.14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் தருமபுரி நகராட்சி புதிய பேருந்து நிலையத்தின் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, அமைச்சர்கள் எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், ஆர்.ராஜேந்திரன், எஸ்.எஸ்.சிவசங்கர், முன்னாள் அமைச்சர் பழனியப்பன், தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் ரெ.சதிஷ், நகராட்சி நிர்வாக இயக்குநர் பி.மதுசூதன் ரெட்டி, உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## தருமபுரி நகராட்சி புதிய பேருந்து நிலையம் –

# சிப்காட் தொழிற்பூங்கா கட்டுமானப் பணிகள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் ஆய்வு!

**தருமபுரி, நவ. 5 -**

**தருமபுரி மாவட்டத்திற்கு நேற்று முன்தினம் (3.11.2025) வருகை தந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தருமபுரி நகராட்சி புதிய பேருந்து நிலையம் மற்றும் தருமபுரி சிப்காட் தொழிற்பூங்காவில் மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

**தருமபுரி நகராட்சியில் புதிய பேருந்து நிலையம்!**

தருமபுரி நகராட்சிக்கு அருகிலுள்ள ஏ. ரெட்டிஅள்ளி கிராமம், சோகத்தூர் பஞ்சாயத்திற்குட்பட்ட பகுதிகளில் 10 ஏக்கர் பரப்பளவில் 39.14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தனியார் மற்றும் பொதுமக்கள் பங்களிப்புடன் நடைபெற்று வரும் தருமபுரி நகராட்சி புதிய பேருந்து நிலையத்தின் கட்டுமானப் பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகள் அனைத்தையும் விரைவில் முடித்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இப்புதிய பேருந்து நிலையத்தில் தற்போது தரைதளம் மற்றும் முதல் தளத்தில் கடைகள், உணவகங்கள், ATM மையம், பொருட்கள் வைப்பதற்கான பாதுகாப்பு அறை, கழிவறைகள், நேரக் காப்பாளர் அறை, தாய்மார்கள் பாலூட்டும் அறை, பயணிகள் மற்றும் ஓட்டுநர்கள் ஓய்வு அறைகள், 55 எண்ணிக்கையிலான பேருந்து நிறுத்தும் இடம், நடைபாதை, பயணிகள் அமரும் இடத்தில் டைல்ஸ் பதிக்கும் பணிகள், பிரதான சாலை மற்றும் மழைநீர் வடிகால் பணிகள் போன்ற பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது.

**தருமபுரி சிப்காட் தொழிற்பூங்கா!**

தருமபுரி சிப்காட் தொழிற்பூங்காவிற்கு வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அங்கு நடைபெற்று வரும் அலுவலகக் கட்டடம், சிறு பாலங்கள், மழைநீர் வடிகால் பணிகள் போன்ற கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர், இப்பணிகள் அனைத்தையும் விரைவாக முடித்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

தருமபுரி வட்டம், அதகபாடி கிராமம் மற்றும் நல்லம்பள்ளி வட்டம், தடங்கம், அதியமான்கோட்டை மற்றும் பாலஜங்கமனஹள்ளி ஆகிய கிராமங்களில் மொத்தம் 1,733 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, சுற்றுச்சூழல் அனுமதி 4.11.2024 அன்று பெறப்பட்டு, இத்தொழிற் பூங்கா செயல்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இத்தொழிற் பூங்காவில் உட்புற சாலைகள், மழைநீர் வடிகால், தெரு விளக்கு, நீர் விநியோகம் போன்ற உட்கட்டமைப்பு மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள மொத்தம் 937.36 கோடி ரூபாய் நிதி வழங்கிட ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இத்தொழிற் பூங்காவில் 1.35 கி.மீ நீள அணுகு சாலைக்கான பணி முழுவதும் 14.04 கோடி ரூபாய் செலவில் முடிக்கப்பட்டுள்ளதுடன், பூங்காவினையொட்டியுள்ள தேசிய நெடுஞ்சாலை 44-ன் சேவைச் சாலையை 5.42 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் அகலப்படுத்த பணி ஆணை வழங்கப்பட்டு, இப்பணி மார்ச் மாதம் தொடங்கப்பட்டு, இந்த ஆண்டு இறுதிக்குள் முடிக்கப்படும்.

மேலும், முதற்கட்டமாக 200 ஏக்கர் நிலப்பரப்பில் மழைநீர் வடிகால், சிறுபாலங்கள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ள 103.08 கோடி ரூபாய் திட்ட நிதி ஒப்புதல் வழங்கப்பட்டு, அதில் முதற்கட்டமாக 66.70 கோடி ரூபாய்க்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் அனைத்தும் ஜீன் 2026-ல் முடிக்கப்படும்.

இதுவரை, இத்தொழிற் பூங்காவில் 9 தொழில் நிறுவனங்களுக்கு மொத்தம் 40.91 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் இத்தொழிற் பூங்காவின் விரிவாக்கத்திற்காக (நிலை -II க்காக), தருமபுரி வட்டம், அதகபாடி கிராமம் மற்றும் நல்லம்பள்ளி வட்டம், தடங்கம் மற்றும் பாலஜங்கமனஹள்ளி ஆகிய கிராமங்களில் மொத்தம் 690 ஏக்கர் நிலம் தெரிவு செய்யப்பட்டு, அதில் 132 ஏக்கர் பட்டா நிலம் கையகப்படுத்த அரசின் நிருவாக அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து தற்போது நில எடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அத்துடன் 558 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலத்தினை சிப்காட் நிறுவனம் பெயரில் நில உரிமை மாற்றம் செய்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தருமபுரி சிப்காட் தொழிற்பூங்கா முழு செயல்பாட்டிற்கு வரும்பொழுது, தமிழ்நாட்டிலுள்ள மிகப் பெரிய தொழிற்பூங்காக்களில் ஒன்றாக திகழும் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இத்தொழிற்பூங்காவில் பேட்டரி மற்றும் மின்வாகனங்களின் உற்பத்திக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

இந்த ஆய்வின்போது, பொதுப் பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், முன்னாள் அமைச்சர் பழனியப்பன், தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் ரெ.சதிஷ், நகராட்சி நிர்வாக இயக்குநர் பி.மதுசூதன் ரெட்டி, சிப்காட் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கே.செந்தில் ராஜ், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.11.2025) இராணிப்பேட்டை நகராட்சி அலுவலக வளாகத்தில் நகராட்சி நிர்வாகத்துறையால் 15.80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்ட பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் நினைவகத்தை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, முனைவர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் ஜெ.எல்.ஈஸ்வரப்பன், ஏ.எம். முனிரத்தினம், மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் ஜெ.யு. சந்திரகலா, நகர்மன்றத் தலைவர் திருமதி சுஜாதா வினோத், துணைத் தலைவர் ரமேஷ் கருணா மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.